DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

**OS.NO. 99/2025**

Deposition of Witness : P.W.2

| | |
|---|---|
| Name - **திரு.பரமராஜ்** | Father's Name – |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **31.07.2026**

**(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )**

**முதல் விசாரணை –**

1. நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 2வது சாட்சி. எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்தேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவை. சரி என ஒப்புக்கொண்டு எனது கையொப்பத்தினை செய்துள்ளேன். வா.த.சா.ஆ.1,2 ஆகிய கடனுறுதி சீட்டுகளில் நான் தான் எழுதியதும், சாட்சியமும் என்று கையொப்பம் செய்துள்ளேன்.

**சான்றாவணங்கள் : இல்லை**

**குறுக்கு விசாரணை**

1. சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததா என்றால் இல்லை. வாதி தான் என்னை நீதிமன்றத்திற்கு இன்று அழைத்து வந்தார். நான் கடந்த 30 ஆண்டுகளாக கடனுறுதி சீட்டுகளை எழுதிக் கொடுத்து வருகிறேன், வருடத்திற்கு 1,2 கடனுறுதி சீட்டுகள் வரும். கடனுறுதி சீட்டுகள் விபரமாக நான் தேனி, உத்தமபாளையம் நீதிமன்றங்களில் பல

வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால், வருடத்திற்கு ஒரு வழக்குகளில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். அந்த வகையில் நான் எத்தனை வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை.

2. கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுக்கும் வகையில் எனக்கு ரூ.100– ரூ.200/– வரை கிடைக்கும். மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட கடனுறுதி சீட்டானது நான் பூசாரிகவுண்டன்பட்டியில் இருந்தபோது என்னை பேருந்து நிலையத்திலிருந்து 2பேர் அழைத்தார்கள், அதன் பேரில் நான் கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தேன். அதற்கு முன்பு எனக்கு வாதியை தெரியுமா என்றால் அவரை தெரியாது. நான் கடனுறுதி சீட்டினை எழுதிக் கொடுக்கும் விபரம் வாதி எப்படி தெரிந்ததென்றால், நான் எழுதிக் கொடுக்கும் விபரம் தெரிந்து தான் வாதியும், பிரதிவாதியும் என்னை அழைத்தனர்.

3. நான் இந்த புரோநோட்டினை வாதியின் வீட்டில் வைத்து எழுதிக் கொடுத்தேன். நான் எனது கையில் அடிபட்டு பூசாரிகவுண்டன்பட்டிக்கு காலை 11.00 மணியளவில் சென்றேன், அப்போது தான் என்னை அழைத்தனர். நான் கடனுறுதி சீட்டு எழுதுவதற்கு முன்பு அந்த கடனுறுதி சீட்டில் எந்தவித கையொப்பமும் இருந்ததா என்றால் அவ்வாறு இல்லை. நான் எழுதிய கடனுறுதி சீட்டில் எத்தனை பேர்கள் கையெழுத்து போட்டார்கள் என்றால் சாட்சிகள் கையொப்பம் செய்தார்கள், சாட்சிகள் கையொப்பம் செய்ததை நான் பார்க்கவில்லை.

4. நான் கடனுறுதி சீட்டை பூர்த்தி மட்டும் செய்து கொடுத்தேன். வாதி, பிரதிவாதி எவ்வளவு கடன் தொகை என்று பேசிக்கொண்ட விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதியும், பிரதிவாதியும் சொன்னதின்பேரில் அந்த கடனுறுதி சீட்டில் தொகையை பூர்த்தி செய்தேன் என்றால் சரிதான், வாதி பணம் கொடுத்த விபரத்தை நான் பார்த்தேனா என்றால், அவர் வீட்டிற்குள் வைத்து கொடுத்தார், அதனை நான் பார்க்கவில்லை. எவ்வளவு தொகை பணம்

கொடுத்தார் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டில் 1வது சாட்சியாக கையொப்பம் போட்டவரின் தந்தை பெயரோ, அவரது முகவரியோ குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை. மற்ற 2 சாட்சிகளின் ஊர், விலாசம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் அதனை நான் பார்க்கவில்லை.

5. கடனுறுதி சீட்டில் கையொப்பம் செய்தவர்களை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் வயதாகிவிட்டதால் எனக்கு தற்போது அடையாளம் காட்ட முடியாது. நான் இன்றுநீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்தததற்கு வாதி எனக்கு செலவிற்கு பணம் கொடுப்பார் என்று சொன்னால் ரூ.100/– மட்டும் கொடுத்தார். நான் கடனுறுதி சீட்டினை என்னுடைய பேனா மையினாலும், கடனுறுதி சீட்டில் கையொப்பம் போட்டது வேறொரு பேனா மையினாலும் என்று சொன்னால் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் அவர்கள் வைத்திருந்த பேனாவால் கையொப்பம் செய்தார்கள். நான் பல வழக்குகளில் பணம் வாங்கி கொண்டு சாட்சியம் அளிக்கும் நபர் என்றும், நான் கம்பம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பூர்த்தி செய்து கொடுத்தேன் என்றும், நான் வாதி வீட்டிற்கு செல்லவில்லை என்றும், பிரதிவாதியை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதியை பார்த்ததில்லை.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR Digitally signed by A. SARAVANAKUMAR Date: 2026.07.31 16:50:49 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.